படாமல் இரயில் பாதைகளில் தண்டவாளங்களில் பாறாங் கற்களை வைப்பது, இது போன்ற வன்முறைச் செயல்கள் எல்லாம் பாட்டாளி மக்கள் கட்சியினர் வழக்கமாகச் செய்து வரும் செயல்கள் ஆகும்.

ஒரு அப்பாவி ரெயில்வே ஸ்டேஷன் மாஸ்டர். அவர் எந்த வகையில் நாட்டு நடப்புகளுக்குப் பொறுப்பாளியாக முடியும்? அவரை அரிவாளால் வெட்டியிருக்கிறார்கள். கவர்ன் மெண்ட் சர்வண்ட்-ஆக இருக்கின்ற பஸ் ஓட்டுநர்களை அரி வாளால் வெட்டியிருக்கிறார்கள். கடப்பாறைகளால் அடித் திருக்கிறார்கள். இவர்களால் எத்தனையோ உயிர்களும் போய் இருக்கின்றன. கோடிக்கணக்கான ரூபாய் மதிப்பளவில் பொதுச் சொத்துகள் சேதப்படுத்தப்பட்டுள்ளன. எல்லா வற்றிற்கும் மேலாக இவர்கள் போதிப்பது தேச விரோதக் கொள்கை, மற்றும் நாட்டுப் பிரிவினை. எனவே இத்தகைய ஒரு தேச விரோத, வன்முறைக் கும்பல் நாட்டிற்குத் தேவை தானா என்பதை அனைவரும் சிந்தித்த பிறகு இந்த அமைப் பைத் தடைசெய்ய வேண்டும் என்று மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு நான் கடிதம் எழுதியிருக்கிறேன். இப்பொழுதுதான் அந்தக் கடிதம் சென்று உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, தமிழ்நாட்டு மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு மட்டுமல்ல, இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டைக் கருத்தில்கொண்டு மத்திய அரசாங்கம் விரைவில் இதற்குக் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த மாமன்றத் தின் மூலமாகவும் நான் கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முத லமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்குத் தெரிவித்து இருக்கிற கடிதத்தோடு, அவர்கள் இங்கே தெரிவித்த உணர்வுகளை ஒட்டுமொத்த இந்தப் பேரவையின் உணர்வுகளாக மத்திய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

(இ) கன்னியாகுமரி மாவட்டத்தில் ரேஷன் கார்டுகள் பெறு வதிலுள்ள சிரமங்கள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கன்னியாகுமரி மாவட் டத்தில் ரேஷன் கார்டுகள் பெறுவதில் உள்ள பிரச்சினை பற்றி அவையின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டு மென்று திரு. மா. சுந்தரதாஸ் அவர்கள் அனுமதி கேட்டிருக் கிறார்கள். இதே பிரச்சினை குறித்து திரு. கு. லாரன்ஸ், டாக்டர் தே. குமாரதாஸ், டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை போன்ற மாண்புமிகு உறுப்பினர்களும் என்னுடைய கவனத் திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்களும் இந்தப் பிரச்சினையை எழுப்பியதாகக் கருதப்படுகிறது. திரு. மா. **சுந்தரதாஸ்.**

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாவட்டம் கேரளாவினுடைய எல்லை மாவட்டம். இந்த மாவட்டத்திலே ரேஷன் கார்டுகள் பெறுவதிலே இருக்கிற பிரச்சினை முக்கியமான ஒன்றாக இருக்கிறது. பலமுறை இதுபற்றி சொல்லியிருக்கிறேன்.

கடைசியாக, அமைச்சர் அவர்கள், எம்.எல்.ஏ.-க்களுடைய பரிந்துரை இருந்தால் கொடுக்கலாம் என்று சொன்னார்கள். இதுவரை சராசரியாக ஒவ்வொரு எம்.எல்.ஏ.—யும் செய்த பரிந்துரையின்பேரில் 150, 200 கார்டுகள் தான் கொடுக்கப் பட்டிருக்கின்றன. ஆனால் இன்றைக்கு விளவங்கோடு தாலு காவைப் பொறுத்தவரையில் மட்டும் 5 ஆயிரம், 6 ஆயிரம் கார்டுகளுக்கு மேல் எம்.எல்.ஏ. பரிந்துரை செய்ததற்குப் பின்னால், அதிகாரிகளே வந்து விசாரித்ததற்குப் பின்னால், அதை நான் குறை சொல்லவில்லை— எல்லாம் சரியான முறை யில் இருக்கிறது, கார்டுகள் கொடுக்க தயார் நிலையில் இருக்கும் நிலையில் அரசு அனுமதித்தால் கொடுக்கலாம் என்று அதிகாரிகள் சொல்லும் நிலையில் அங்கே ரேஷன் கார்டு பெரிய பிரச்சினையாக இருக்கிறது. அரிசிக்காக மட்டு மல்ல, மக்களுடைய எல்லாவிதமான பிரச்சினைகளுக்கும் குடும்ப அட்டை தேவை. உதாரணமாக ஐ.ஆர்.டி.பி. லோன் வேண்டுமென்று சொன்னாலும், பேங்க் லோன் வேண்டு மென்று சொன்னாலும், பாஸ்போர்ட் வேண்டுமென்று சொன்னாலும், எடுத்தற்கெல்லாம் ரேஷன் கார்ட் வேண்டு மென்று கேட்கிறார்கள். 5 ஆயிரம் என்பது விளவங்கோடு தாலுகாவை பொறுத்தவரையில் மட்டும். ஆனால் ஜில்லா பூராவும் 15 ஆயிரம் கார்டுகளுக்கு மேல் வழங்கப்பட வேண்டி யிருக்கிறது என்று கலெக்டர் சொன்னார். அது எப்படி வருகிறது என்று சொன்னால் ஒரே குடும்பமாக இருந் தவர்கள் தனியே குடித்தனம் செல்லும் நிலையில், குடும்பம் பிரிக்கப்பட்ட நிலையில் அவர்களுக்கு கார்டு தேவைப்படு கிறது. அதிகாரிகள் எல்லாம் நேரில் சென்று விசாரணை செய்து தனிக் குடித்தனம் செய்வது உண்மைதான் என்று விசாரணை முடித்து கார்டு வழங்கலாம் என்கிற நிலையி லுள்ள கார்டுகளை மட்டும் தான் இங்கே சொல்கிறேன். ஆகவே, அதிகாரிகள் கொடுக்கலாம் என்று முடிவு செய்துள்ள ரேஷன் கார்டுகளை மட்டுமாவது உடனடியாக வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணையிடுவார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் மற்ற மாவட்டங்களைவிட அங்கே இந்தப் பிரச்

1992 செப்டம்பர் 24] [திரு. ஜி. விசுவநாதன்]

சினை சற்று சிக்கலாக இருக்கிறது. அங்கே வருகின்ற விண்ணப்பங்களும் மற்ற எல்லா தொகுதிகளையும் விட அதிகமாகவே இருக்கிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்ற 4 தாலுக்காகளில் மட்டும் இதுவரை வந்துள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை 35,088. இதுவரை நாம் வைத்திருந்த சட்டப்படி 2 பங்கு போலிக் கார்டுகளைப் பிடித்தால் ஒரு பங்கு புதிய கார்டுகளை வழங்கலாம் என்று வைத்திருந்தோம். அது இந்த மாவட்டத்திற்கு பொருத்தம் இல்லையென்று அங்கேயிருந்த மாவட்ட ஆட்சித் தலைவர் சொன்ன காரணத்தால் அதற்கு விதிவிலக்கு அளித்து இதுவரையில் 8,396 கார்டுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதிலே, சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களின் பரிந்துரையின்பேரில் முன்னுரிமை கொடுத்து வழங்கிய கார்டுகள் 936 என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். தாலுகா வாரியாக பார்க்கும் போது குறிப்பாக, விளவங்கோடு பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். அங்கே மட்டும் 11,458 விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. இங்கே அதிகமாக விண்ணப்பங்கள் வருவதற்கான காரணத்தையும் உறுப்பினர் தெரிவித்தார். தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்ல, அந்தப் பகுதியிலே கேரளாவிலே வாழ்பவர்கள்கூட அந்தப் பகுதிக்கு வந்து குடும்ப அட்டை வேண்டுமென்று கேட்கிறார்கள். அதை அடையாள அட்டையாகக்கூட பலபேர் பயன்படுத்துகிறார்கள். நம்முடைய பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் இடம் வாங்குவதற்கு மற்றும் எம்பிளாய்மென்ட் எக்சேஞ்சில் பெயர்களை பதிவு செய்வதற்குக்கூட பயன்படுத்துகிறார்கள். ஆகவே, ரெவின்யூ இலாகாவின் மூலம் அத்தகைய அடையாள அட்டைகளை வழங்குவதற்கு முடியுமா என்பதைப் பற்றி கூட யோசித்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் எந்தவிதமான சிரமமும் இல்லாமல், யார் யாருக்கு உள்ளபடியே கார்டு வழங்கப்படாமல் இருக்கிறதோ அவர்களுக்கு உடனடியாக வழங்கப்படும். சட்டமன்ற கூட்டத் தொடர் முடிந்த உடனேயே நானே கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நேரில் சென்று இது குறித்து உரிய முறையில் பிரச்சினையை தீர்த்து வைப்பேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11.00

3. விதி 110–ன் கீழ் முதலமைச்சரின் அறிக்கைகள்.

(அ) இலவச வேட்டி, சேலைகள் வழங்கும் திட்டத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இரண்டு முக்கியப் பிரச்சினைகள் குறித்து பேரவையில் அறிக்கைகள் வைக்க வேண்டி பேரவை விதி